# கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. N.முதரளிதரன், பி.ஏ.,பி.எல்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில்நாதன் | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

**SC.No. 126/2016** நாள்: 16.09.2022

PW.9:

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**முதல் விசாரணை:**

நான் உடுமலைப்பேட்டையில் ஒ.எம்.சி லைனில் குடியிருந்து வருகிறேன். நான் போட்டோ கிராப்பராக இருக்கிறேன். தற்போது இருந்து 8 வருடங்களுக்கு முன்பு பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் என்பவரின் திருமணத்திற்கு நான் தான் வீடியோ எடுத்தேன், அந்த பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் என்பவரின் திருமணம் உடுமலைப்பேட்டை பிரசன்ன விநாயகர் கோவிலில் நடந்தது, பிறகு அவர்களுடைய திருமண வரவேற்பு உடுமலைப்பேட்டை நாடார் திருமண மண்டபத்தில் நடந்தது. அதன் பிறகு அந்த பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் எனக்கு ஓரளவு நண்பரானார். நான் 03.02.2015ம் தேதி இரவு சுமார் 9.00 மணியிலிருந்து இரவு 10.00 மணிக்குள் என் சொந்த வேலையாக உடுமலைப்பேட்டையிலிருந்து தாராபுரத்திற்கு TVS Sport மோட்டர் சைக்கிளில் சென்றேன், அப்போது துங்காவி என்ற இடத்தில் சிறுநீர் கழிப்பதற்கு இறங்கினேன், நான் சிறுநீர் கழித்துவிட்டு பார்த்த போது பாலாஜி என்ற பாலசுப்பிரமணியமும் அவருடன் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் 1ம் எதிரி சேகர் (எ)

சந்திர சேகரும், சேகர் என்ற சந்திரசேகர் Bajaj CT 100 பைக்கை ஒட்ட பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் அதன் பின்னால் அமர்ந்து சென்றனர், அவர்களுக்கு பின்னால் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் 2ம் எதிரி கார்த்தி அதே பைக்கில் அமர்ந்து கொண்டு அந்த மூன்று பேரும் ஒரே பைக்கில் எனக்கு முன்னால் சென்றார்கள், நான் அவர்களை கூப்பிடலாம் என்று இருந்தேன், அவர்கள் ஏதோ மது அருந்த போவது போல் தெரிந்தது, அதற்கு முன்பு அவர்கள் மூன்று பேரும் உடுமலைப்பேட்டை டாஸ்மாக் பாரில் மது அருந்துவதை பார்த்திருக்கிறேன், அதனால் அன்று அவர்கள் மது அருந்ததான் போகிறார்கள் என்று நான் நினைத்துக் கொண்டு என் வேலையை பார்க்க போய்விட்டேன். மறுநாள் காலை 05.02.2015ம் தேதி தினத்தந்தி பேப்பரில் பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தை கொலை செய்ததாக செய்தி வந்திருந்தது. 07.02.2015 அன்று அலங்கியம் காவல் நிலைய ஆய்வாளர் முன்பு நான் ஆஜராகி நடந்த விசயத்தை சொன்னேன. 1ம் எதிரி சேகர் என்ற சந்திரசேகரும், 2ம் எதிரி கார்த்தியும் சேர்ந்து தான் பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தை கொலை செய்ததாக தெரியவந்தது, நான் அவர்கள் மூவரையும் பார்த்ததை ஆய்வாளரிடம் சொன்னேன். பிறகு விசாரணையில் பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் மனைவியான நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் 3ம் எதிரி மகேஷ்வரியும், 1ம் எதிரி சேகர் என்ற சந்திரசேகரும் ஏற்கனவே காதலித்து வந்ததாகவும், பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்திற்கும், 3ம் எதிரி மகேஷ்வரிக்கும் திருமணம் ஆன பிறகும் 1ம் எதிரி சேகர் என்ற சந்திரசேகரும், 3ம் எதிரி மகேஷ்வரியும் தொடர்ந்து காதலித்து வந்ததாக தெரியவந்தது. பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் எந்த ஒரு வினையும் தெரியாதவர், அவரை ஏமாற்றி கொலை செய்துவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் போட்டோகிராப்பி எந்த இன்ஸ்ட்டிடியூட்டில் படித்தேன் என்று கேட்டால், நான் போட்டோகிராப்பி படிக்கவில்லை, ஸ்டுடியோக்கு சென்று பழகினேன். நான் உடுமலைப்பேட்டையில் மனோஜ் என்பவர் வைத்துள்ள மனோஜ் ஸ்டுடியோவில் போட்டோகிராப்பி பழகினேன். நான் தற்போது எங்கு ஸ்டுடியோ வைத்துள்ளேன் என்று கேட்டால், நான் ஸ்டுடியோ வைக்கவில்லை, போட்டோகிராப்பியை பகுதி நேர வேலையாகதான் செய்கிறேன். நான் போட்டோ லேப் எங்கு வைத்துள்ளேன் என்று

கேட்டால், உடுமலைப்பேட்டை சத்திரம் வீதியில் ஆஸ்பத்திரிக்கு அருகே நான்கு ரோடு சந்திப்பில் லேப் இருக்கிறது, அது மனோஜ் உடைய லேப் ஆகும், எனக்கு தனியாக லேப் இல்லை. நான் தற்போது என்ன கேமரா வைத்துள்ளேன் என்று கேட்டால், என்னிடம் எப்போதும் சொந்தமாக கேமரா இல்லை, நான் மனோஜின் AG 90 கேமராவை வாங்கிக்கொண்டு போய் விழாவிற்கு போட்டோ எடுப்பேன். இறந்துபோன பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் திருமணத்திற்கு நான் எத்தனைப்பேரை உதவிக்கு கூப்பிட்டு போனேன் என்று கேட்டால், நான் மனோஜை கூப்பிட்டுப்போனேன், மனோஜ் போட்டோ எடுத்தார், நான் வீடியோ எடுத்தேன். போலீசார் என்னை விசாரித்த போது நான் போட்டோகிராப்பர் என்றும், திருமணத்திற்கெல்லாம் போட்டோ எடுப்பேன் என்றும் பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் திருமணத்திற்கும், திருமண வரவேற்பிற்கும் நான்தான் வீடியோ எடுத்தேன் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளதை சொல்லியுள்ளேனா என்று கேட்டால், ஆமாம் சொல்லியுள்ளேன். என் தொழில் பெய்ன்டர் தொழில் என்று சொன்னால், ஆமாம். என் தாயாரும் இறந்துபோன பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் தாயாரும் உடன் பிறந்தவர்கள் என்று சொன்னால், ஆமாம். போலீசார் என்னை விசாரித்த போது என் தொழில் பெய்ன்டர் என்பதையும், இறந்து போன பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் என் பெரியம்மாவின் மகன் என்பதையும் சொன்னேனா என்று கேட்டால், நான் அதை சொல்லவில்லை. இறந்து போன பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் எனக்கு அண்ணன் வேண்டும். எனக்கு குடிபழக்கம் உண்டு. பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்திற்கும் குடிபழக்கம் உண்டு என்றால் சரிதான். பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்திற்கு குடிபோதையில் பலருடன் தகராரு செய்து பல பிரச்சனைகள் ஏற்பட்டிருந்தது என்று சொன்னால், இல்லை, அவர் எப்போதாவது தான் குடிப்பார். அன்று இரவு 9.00 மணிக்கு தாராபுரத்திற்கு என்ன வேலைக்காக யாரை பார்க்க போனேன் என்று கேட்டால், தாராபுரத்தில் என் பெரிய மச்சான் இருக்கிறார், அவர் விழா என்று சொன்னார், அதனால் அவரை பார்க்க போனேன். என் பெரிய மச்சான் பெயர் நாகராஜ், அந்த நாகராஜின் தந்தை பெயர் வெள்ளத்துரையாகும், என் பெரிய மச்சான் நாகராஜ் தாராபுரத்தில் வாடகை வீட்டில் இருக்கிறார், ஆனால் அந்த வீட்டின் கதவு எண்ணும், வீடு இருக்கும் தெருவின்

பெயரும் எனக்கு தெரியாது. பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் பிரேத பரிசோதனை தாராபுரத்தில் தான் நடந்தது, அதற்கு என் பெரிய மச்சான் நாகராஜ் வந்திருந்தாரா, அவரை போலீசார் விசாரித்தார்களா என்று கேட்டால், அவர் வரவில்லை. தாராபுரத்தில் பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் பிரேத பரிசோதனை நடந்த போது நான் உட்பட என் குடும்பத்தார் அனைவரும் அங்கு இருந்தோம் என்று சொன்னால், ஆமாம். அந்த பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் பிரேத பரிசோதனைக்கு 2 நாட்களுக்கு முன்பே அவர் காணாமல் போய்விட்டார், அவரை எல்லோரும் தேடினோம் என்று சொன்னால், ஆமாம். பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் பிரேத பரிசோதனையின் போது போலீசார் அங்கு தான் இருந்தார்கள் என்று சொன்னால், அது எனக்கு தெரியாது. பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் பிரேத பரிசோதனை நடந்த போது நான் 03.02.2015 ம் தேதி இரவு 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரன் மற்றும் 2ம் எதிரி கார்த்திக்கோடு, பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தை பார்த்தேன் என்பதை அங்கிருந்த என் பெரியப்பாவான பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் அப்பாவிடமோ, அல்லது அங்கிருந்தவர்களிடமோ, போலீசாரிடமோ சொன்னேனா என்று கேட்டால், போலீசாரிடம் சொன்னேன். நான் அவ்வாறு போலீசாரிடம் சொன்னது என் குடும்பத்தாருக்கும் தெரியும் என்று சொன்னால், ஆமாம். நான் போலீசாரிடம் கடைசியாக பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தை 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரன் மற்றும் 2ம் எதிரி கார்த்திக்கோடு பார்த்தேன் என்று சொன்ன பிறகு தான் மறுநாள் போலீசார் 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரை கைது செய்தார்கள் என்று சொன்னால், இல்லை அதற்கு முன்பே போலீசார் 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரை கைது செய்துவிட்டார்கள். போலீசார் 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரை கைது செய்த அன்றே 2ம் எதிரி கார்த்திக்கையும் கைது செய்துவிட்டார்கள் என்று சொன்னால், இல்லை அதற்கு மறுநாள் தான் 2ம் எதிரி கார்த்திக்கை கைது செய்தனர். நான் அலங்கியம் காவல் நிலையத்திற்கு மொத்தம் இரண்டு முறை போனேன் என்றும், பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் பிரேத பரிசோதனை நடந்த அன்று மதியம் போலீசார் எங்கள் எல்லோரையும் காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி விசாரித்தார்கள், அதற்கு மறுநாளும் போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி விசாரித்தார்கள்

என்று சொன்னால், ஆமாம். அதற்கு பிறகு போலீசார் தற்போது சம்மன் கொடுக்கும் போதுதான் வந்தார்கள் என்று சொன்னால், ஆமாம். நான் காவல் நிலையத்திற்கு முதல் நாள் போனபோதே 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரும், 2ம் கார்த்திக்கும் கைது செய்யப்பட்டு அங்கு இருந்தார்கள் என்று சொன்னால், இல்லை நான் முதல் நாள் காவல் நிலையம் போனபோது 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகர் மட்டும் அங்கு இருந்தார். நான் இரண்டாம் நாள் காவல் நிலையத்திற்கு போன போது 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரும், 2ம் எதிரி கார்த்திக்கும் அங்கு இருந்தார்கள் என்று சொன்னால், நான் அதை பார்க்கவில்லை. நான் அன்று தாராபுரத்திற்கு பைக்கில் போன போது வாய்க்கால் அருகே மேற்கிருந்து கிழக்கு நோக்கி போனேன், அப்படிதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால், ஆமாம். நான் முதல் விசாரணையில் அன்று இரவு 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரையும், 2ம் எதிரி கார்த்தியையும் பார்த்ததாக சொல்லியுள்ளது போல்தான், போலீசார் என்னை விசாரித்தபோதும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால், ஆமாம். பாலாஜி என்ற பாலசுப்பிரமணித்தின் திருமணத்திற்கு பிறகும் 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரும், 3ம் எதிரி மகேஷ்வரியும் காதலித்து வந்தார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரும், 2ம் எதிரி கார்த்தியும் சேர்ந்து பாலாஜி என்ற பாலசுப்பிரமணித்தை கொலை செய்ததாக சொல்வதை நான் நேரில் பார்த்தேனா என்று கேட்டால், நான் அதை நேரில் பார்க்கவில்லை. இந்த எதிரிகள் மீது நான் சொல்லும் குற்றச்சாட்டுகள் அனைத்தும், போலீசார் கற்பனையாக சொல்லும் குற்றச்சாட்டுகள் என்றும், நான் போலீசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியில்லை. நான் இறந்து போன பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் என் பெரியம்மா மகன் என்பதை மறைத்து வீடியோ எடுக்க போன போது அவரை பழக்கம் என்று முதல் விசாரணையில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால், ஆமாம். இறந்து போன பாலாஜி என்ற பாலசுப்பிரமணித்திற்கும், 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகருக்கும், 2ம் எதிரி கார்த்திக்கும் அறிமுகமே கிடையாது என்றும் நான் அதையெல்லாம் மறைத்து அவர்கள் மூவரும் ஒன்றாக தண்ணிப்போட்டதை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்,

சரியில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் 1ம் எதிரி சேகர் (எ) சந்திரசேகரையும், 2ம் எதிரி கார்த்திக்கையும் இறந்து போன பாலாஜி என்ற பாலசுப்பிரமணித்தோடு பார்க்கவில்லை என்றும், அப்படி பார்த்ததாக போலீசார் சொல்லிகொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. நான் புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பவர் இல்லை என்று சொன்னால், சரியில்லை எடுப்பேன். போலீசார் எழுதிய வாக்குமூலம் கற்பனையானது என்றும், நான் போலீசார் சொல்லி கொடுத்தப்படி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

**2ம் எதிரி தரப்பில் மேற்கண்ட 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

என் பெரியம்மா சுசிலாவிற்கு பாலாஜி என்ற பாலசுப்பிரமணியம் ஒரே மகன் என்று சொன்னால், சரிதான். என் அம்மாவும், இறந்துபோன பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் அம்மாவும் கூடப்பிறந்தவர்கள், அவர்கள் கூடப்பிறந்த வேறு யாரும் இல்லை என்று சொன்னால், சரியில்லை, என் பெரியம்மா சுசிலாகூட பிறந்த ஒரு அண்ணன், இரண்டு தம்பி, இரண்டு தங்கை இருக்கிறார்கள். பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் பெற்றோர்கள் பெயரில் பூமியும், சொத்தும் இருக்கிறது என்று சொன்னால், சரியில்லை. பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் பெற்றோர்கள் பெயரில் பூமியும், சொத்தும் இருக்கிறது என்றும், நான் அதை அடைவதற்காக என் முதல் விசாரணையில் மூன்றாம் எதிரி மகேஷ்வரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால், சரியில்லை. 3ம் எதிரி மகேஷ்வரி பற்றி நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது எல்லாம் என் அனுமானத்தின் பேரில் கற்பனையாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால், சரியில்லை. 3ம் எதிரி

மகேஷ்வரிக்கும், மற்ற இரண்டு எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால், சரியில்லை, சம்பந்தம் இருக்கிறது. இந்த வழக்கிற்கும் 3 ம் எதிரி மகேஷ்வரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால், சரியில்லை, இருக்கிறது.